Bank of Baroda

*Zonal Office (Chennai)*

## ஆட்சேர்ப்பு – கடைநிலை ஊழியர்கள் (2016)

பேங்க் ஆ.்.ப் பரோடா மண்டல அலுவலகம், பரோடா பிரைடு, புதிய எண்.41, 3வது தளம், லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், சென்னை-600004– பின்வரும் விவரங்கள்படி சார்புப்பணி பிரிவில் கீழ்காணும் காலியிடங்களுக்கு கடைநிலை ஊழியர் நிலையில் முழுநேரத் துப்புறவுப் பணியாளர் மற்றும் பியூன்/ பியூன் ஆகிய பணிகளுக்கு விண்ணப்பங்களை வரவேற்கிறது.

| மாநிலம் | பதவி | SC | ST | OBC | UR* | மொத்தம் | இதில் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | EXS | VI | HI | OH |
| தமிழ்நாடு | துப்புறவுப் பணியாளர் மற்றும் பியூன் | 25 | -- | 40 | 90 | 155 | 37 | 3 | 3 | 3 |
| தமிழ்நாடு | பியூன் | -- | -- | 10 | 25 | 35 | 9 | -- | -- | -- |
| புதுச்சேரி | துப்புறவுப் பணியாளர் மற்றும் பியூன் | -- | -- | -- | 2 | 2 | -- | -- | -- | -- |
| புதுச்சேரி | பியூன் | -- | -- | -- | 1 | 1 | -- | -- | -- | -- |

**விளக்கம்:** SC-ஷெட்யூல்டு பிரிவினர், SC-ஷெட்யூல்டு பழங்குடியினர், OBC-இதர பிற்பட்டோர், UR-ஒதுக்கீடற்றது. OH-உடல் உறுப்பில் குறைபாடுடையவர், VI-கண்பார்வை குறைபாடுடையவர், HI-காதுகேட்கும் திறனில் குறைபாடுடையவர், EXS-முன்னாள் ராணுவத்தினர்.

**# இறுதியாகத் தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள், எந்தவொரு மாவட்டத்தில் உள்ள காலியிடத்திற்கும் வங்கியின் நிர்வாக தேவைப்படி நியமனம் செய்யப்படுவர்.**

*** ஒதுக்கீடற்ற காலியிடங்களுக்கு SC/ST/OBC பிரிவினரும் விண்ணப்பிக்கலாம். எனினும் ஒதுக்கீடற்ற பிரிவினருக்கான தகுதி, வழிகாட்டுதல் அவர்களுக்குப் பொருந்தும்.**

அரசு விதிமுறைகளின்படி ஒதுக்கீடு வழங்கப்படும்:

**<u>தகுதி நிபந்தனைகள்:</u>**

**வயது:**

22.11.2016ம் தேதியன்று குறைந்தபட்சம் 18 வயது பூர்த்தியாகியிருக்க வேண்டும். ஆனால் 26 வயதுக்கு மீறாமலிருக்க வேண்டும். உயர்ந்தபட்ச வயது வரம்பில் அரசு வழிகாட்டுதல் படி SC/ST/OBC/PWD/ முன்னாள் இராணுவத்தினர் ஆகியோருக்கு சலுகைகள் வழங்கப்படுவது பொருந்தும்.

| வரிசை எண். | பிரிவு | உச்ச வயது வரம்பில் சலுகை |
|---|---|---|
| 1 | பொது பிரிவினர் (ஒதுக்கீடற்றவர்கள்) | **சலுகை** இல்லை |
| 2 | ஷெட்யூல்டு பிரிவினர் / ஷெட்யூல்டு பழங்குடியினர் | 5 ஆண்டுகள் |
| 3 | இதர பிற்பட்டோர் (செல்வந்தர் அல்லாதோர்) | 3 ஆண்டுகள் |
| 4 | ஊனமுற்றோர் | 10 ஆண்டுகள் |
| 5 | முன்னாள் இராணுவத்தினர் / ஊனமுற்ற இராணுவத்தினர் | இராணுவத்தில் பணியாற்றிய உரிய காலம் + 3 ஆண்டுகள் (SC/ST பிரிவினரைச் சேர்ந்த இராணுவத்தினருக்கு 8 ஆண்டுகள்) அதிகபட்ச வயது 50க்கு மிகாமல். |
| 6 | விதவைகள், விவாகரத்தான பெண்கள் மற்றும் சட்டப்படி கணவரிடமிருந்து பிரிந்த மறுமணமாகாத பெண்கள் | 9 ஆண்டுகள் |
| 7 | 01.01.1980 இருந்து 31.12.1989 காலம் வரை ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் நிரந்தரவாசம் செய்தவர்கள் | 5 ஆண்டுகள் |
| 8 | 1984 ஆம் ஆண்டு கலவரங்களில் பாதிக்கப்பட்டவர்கள் | 5 ஆண்டுகள் |
| 9 | போபால் யூனியன் கார்பைடு தொழிற்சாலையின் நிரந்தர பணியிலிருந்து பணிநீக்கம் செய்யப்பட்டோர் (மத்திய பிரதேச மாநிலத்திற்கு மட்டும் பொருந்தும்) | 5 ஆண்டுகள் |

**குறிப்பு:**

(i) SC/ST/OBC பிரிவினருக்கு வழங்கப்படும் வயது வரம்புச் சலுகை மேற் குறிப்பிட்ட 4 முதல் 9 வரையான பிரிவுகளில் ஏதேனும் ஒன்றுடன் கூட்டாக அனுமதிக்கப்படும்.

(ii) உச்ச வயது வரம்பு பொதுப் பிரிவினருக்கு உரியதாகும்.

**<u>கல்வித்தகுதி</u>:**

- 10-ம் வகுப்பு தேர்ச்சி அல்லது அதற்கு இணையான தகுதி.
- உள்ளூர்மொழியைப் பேச, எழுத, படிக்கத் தெரிந்தவராக இருப்பதுடன், ஆங்கிலம் அறிந்திருப்பது கூடுதல் தகுதியாகக் கொள்ளப்படும்.

**<u>விண்ணப்பக்கட்டணம்:</u>**

விண்ணப்பக்கட்டணம்/ தகவல் கடிதத் தொடர்புக்கட்டணம் செலுத்துதல் பின்வருமாறு:

- **SC/ST/PWD/EXSM பிரிவினருக்கு ரூ.100/- மற்றும்.**
- **மற்றவர்களுக்கு ரூ.400/- கட்டணம் ஆகும்.**

**விண்ணப்பக் கட்டணம் செலுத்தும் முறைகள்:**

**1. ஆன்லைனில் கட்டணம் செலுத்தும் முறை (கிரெடிட் கார்டு, டெபிட் கார்டு மற்றும் நெட் பேங்கிக் மூலமாக) -** ஆன்லைனில் விண்ணப்பக் கட்டணம்/ தகவல் கடிதத் தொடர்புக்கட்டணம் செலுத்தும்போது வங்கிப் பரிவர்த்தனைக் கட்டணத்தை விண்ணப்பத்தாரரே ஏற்க வேண்டும்.

**2. வங்கியில் கட்டணம் செலுத்தும் முறை (பேங்க் ஆ.்.ப் பரோடா சலான்) -** ஆன்லைனில் விண்ணப்பத்தினை பூர்த்தி செய்த பிறகு, கட்டணம் செலுத்த தானியங்கி செலுத்துகை படிவம் (பேங்க் ஆ.்.ப் பரோடா சலான்) ஒன்று ஆன்லைனில் வெளிவரும். வங்கிக் கணக்கில் கட்டணத்தை முறையாக வரவு வைக்க, அந்த செலுத்துகை படிவத்தை மட்டுமே பயன்படுத்த வேண்டும். அந்த செலுத்துகை படிவத்தை பூர்த்தி செய்த பின்னர், உங்கள் அருகில் உள்ள பேங்க் ஆ.்.ப் பரோடா வங்கிக் கிளைக்கு சென்று, அப்படிவத்துடன் சேர்த்து பணத்தை செலுத்த வேண்டும்.

**<u>விண்ணப்பிக்க கடைசி தேதி</u>:- 27.12.2016**

**<u>சம்பளம் மற்றும் படிகள்:</u>**

Rs.9,560/- - Rs.18,545/-+பஞ்சப்படி+வீட்டு வாடகைப்படி+பொருந்தக்கூடிய இதர படிகள்.

**<u>தேர்வு முறை:</u>**

ஆன்லைன் தேர்வு முறையில், மதிப்பெண் தகுதிப்படி மட்டுமே விண்ணப்பதாரர்கள் தேர்வு செய்யப்படுவர். தேர்வு, ஆன்லைன் முறையில் கீழ்க்கண்டவாறு நடத்தப்படும்.

| வரிசை எண். | தலைப்பு/ பாடம் | மொத்த மதிப்பெண்கள் | குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்கள் | மொத்த கால அளவு |
|---|---|---|---|---|
| 1 | மாநில மொழி பற்றிய அறிவு | 30 | 12 | 2 மணி நேரம் |
| 2 | ஆங்கில மொழி பற்றிய அறிவு | 10 | 4 | |
| 3 | வங்கிப்பணியைச் சார்ந்த பொது அறிவு | 20 | 8 | |
| 4 | தொடக்கநிலை கணக்கு / எண்ணியல் திறன் | 20 | 8 | |
| 5 | உள சோதனை | 20 | 8 | |
| **மொத்தம்** | | **100** | **40** | |

* நடைமுறையில் உள்ள அரசுவிதிகளின்படி SC/ST பிரிவினருக்கு 5% மதிப்பெண்கள் தளர்த்தப்படும். மேற்காணும் தேர்வுகள் (ஆங்கிலத் தேர்வு தவிர) ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளில் நடத்தப்படும்.

தேர்வு முறையில் மாற்றியமைக்க வங்கிக்கு உரிமையுண்டு, அதன் விவரம் இணையதளத்தில் தெரிவிக்கப்படும். தேர்வு தொடர்பான இதர விரிவான விவரங்கள் அழைப்புக்கடிதத்துடன் இணைத்து அனுப்பப்படும் அல்லது இணையதளத்தில் வெளியிடப்படும்.

**<u>பொறுப்பு துறப்பு:</u>**

விண்ணப்பதாரரைத் தேர்வு செய்யும் நடைமுறையில் எந்தவொரு நிலையிலும் விண்ணப்பதாரர் உண்மைக்கு மாறான தகவல்களைத் தந்திருப்பதாக அல்லது விதிமீறல் செய்திருப்பதாக தெரிந்தால் அது அவரைத் தகுதியிழக்கச் செய்யும். எதிர்காலத்திலும் வங்கியால் நடத்தப்படும் எந்தவொரு தேர்விலும் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார். தற்போதைய தேர்வு நடைமுறையின் போது பொய்யான தகவல்கள் விதிமீறல் எதுவும் கண்டு பிடிக்க முடியாமல் போனாலும் கூட பின்னொரு நிலையில் அவை கண்டு பிடிக்கப்பட்டால், முந்தைய தேதியிலிருந்து அவர் தகுதியிழப்புக்கு உள்ளாவார். காரணம் எதையும் குறிப்பிடாமல் இந்த ஆள்சேர்ப்பு நடைமுறையை ரத்து செய்ய வங்கிக்கு உரிமையுண்டு.

<u>இந்த ஆள்சேர்ப்பு தொடர்பான அனைத்து விஷயங்களிலும் வங்கியின் முடிவே இறுதியானது மற்றும் விண்ணப்பதாரர்களைக் கட்டுப்படுத்தக் கூடியதாகும்.</u>

எந்தவித விளக்கங்களுக்கும், சந்தேகங்களுக்கும் இந்த விளம்பரத்தின் ஆங்கிலப் பதிப்பு நிலவும்.